**கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு.ஐ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,**

ந.க.எண்.பஅ4/4506/2018

நாள்:01.11.2022.

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – கள்ளக்குறிச்சி மாவட்டம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் மணிகண்டன்(திரு).மா என்பவருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் 03.10.2018 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

பார்வை:
1. விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.பஅ1/4506/2018, நாள்:01.10.2018
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)துறை நாள்:26.02.2021.
3. அரசுக்கடித எண்.6895/இ3/2021–5, நாள்:14.12.2021.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18355/2021/டி2, நாள்:18.12.2021.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

–0–0–

<u>உத்தரவு:</u>

பார்வை1–ல் காணும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டம் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிளியூர் ஊராட்சியில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து 11.02.2018 அன்று பணியிடையே காலமான திரு.அ.மாயவன் (லேட்) என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.மா.மணிகண்டன் என்பவருக்கு கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தனியர் திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 03.10.2018 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 2–ல் காணும் அரசாணையில் பத்தி எண்.5.1–ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவையில்லாத இனங்களுக்கு நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள்(One level higher than the appointing authority) வரன்முறை செய்திட ஆணை வழங்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து திரு.மா.மணிகண்டன், இளநிலை உதவியாளர் என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 03.10.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

1/11/22

மாவட்ட ஆட்சியருக்காக, 5/6
கள்ளக்குறிச்சி.

பெறுதல்:

திரு.மா.மணிகண்டன்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
திருநாவலூர். – உரிய வழிமுறையாக.

1/11/2022

நகல்: ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ ஊ)/(கி ஊ), ஊராட்சி ஒன்றியம் திருநாவலூர்.
நகல்: பஅ4 பிரிவு இருப்பு கோப்பிற்கு.